"... இமயம் முதல் குமரி வரை இருக்கின்ற இந்த நாட்டுக்கு இந்தியா என்று பெயர் வைத்தவனே தமிழன்தான். இந்தியம் என்றால் தமிழர்களுடைய இந்து மதம் என்று பொருள் ..."



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**பங்குனி மாத வெளியீடு (Mar 2015 - Apr 2015)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

# தமிழர்களின் மந்திரங்களில் பிறமண்ணினர்கள் புகுத்திய குழப்பங்கள்

காணிக்கை ரூ.10/-

தமிழரின் பண்பாடும், நாகரீகமும்தான் இந்தியப் பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும் அடிப்படை.

# உள்ளுறை

**1. சீவ காயந்திரி மந்திர செயல் விளக்கச் சித்தாந்தம்.**

**2. சீவ காயந்திரி மந்திரம் பற்றிக் குருபாரம்பரியச் செய்தி. - குருதேவர் அருள் விளக்கம்.**

மிகவும் மறையாகவே காக்கப் பட்டு வந்த சீவ காயந்திரி மந்திரம் பற்றிய செய்திகளையும், விளக்கங்களையும், மந்திரத்தையும் குருதேவர் அவர்கள் புரட்சிகரமாக வெளியிட்ட கட்டுரைகள் இவை. பல அருளுலக மறைகள் (Secrets) இந்த இரண்டு கட்டுரைகளிலும் உள்ளன. மீண்டும் மீண்டும் படித்து உணரவும்.

**3. சத்திகள் எத்தனை வகை?**

சத்தி வழிபாடு எதைப் பற்றியது என்பதை விவரிக்கும் இந்தக் கட்டுரை இன்றைய நிலையில் நாட்டின் மதத்துறையில் எவ்வளவு குழப்பங்கள் உள்ளன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**4. நமது தாயகம்.**

நமது தாயகத்தில் உள்ள ஒற்றுமையற்ற நிலைகளால் யாருமே எதையும் பற்றிச் சிந்திக்க இயலாமல் ஆட்டு மந்தைகளை விடக் கேவலமாக வாழுகின்ற நிலை உள்ளது என்பதை விளக்கி, அதை மாற்ற வழி என்ன என்பதைக் கூறும் கட்டுரை.

---

சென்னை-11

17-06-1985

# சீவ காயந்திரி மந்திர செயல் விளக்கச் சித்தாந்தம்

(1) பதினெண்சித்தர்கள் ஆண், பெண், சிறியவர், பெரியவர், ஏழை, பணக்காரர் .... என்ற வேறுபாடுகள் எதுவுமில்லாமல் அனைவரும் அருளை அநுபவப் பொருளாகப் பெற வேண்டும் என்பதற்காகவே, 1) காயந்திரி மந்திரம், 2) காயந்திரி மந்தரம், 3) காயந்திரி மந்திறம், 4) காயந்திரி மாந்தரம், 5) காயந்திரி மாந்தரீகம் என்ற ஐந்தினையும் இம்மண்ணுலகுக்கு வழங்குகிறார்கள். இந்த ஐந்தில் காயந்திரி மந்தரம் என்பதை ஆரம்ப நிலையாக, கருவாய் நிலையாக, தாய்நிலையாக, பயிற்சி நிலையாக ...... வழங்கி; யார் வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், என்ன வேலையைச் செய்து கொண்டிருந்தாலும் தொடர்ந்து 108 முறை கூறி ஓர் அருள் மாலையை அருளுலகுக்கு வழங்கலாம். இதன் மூலம் பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கினையும் படிப்படியாகப் பெறலாம்.

(2) இவற்றையெல்லாம் கடந்து ஆணவம், கன்மம், மாயை ..... என்பனவற்றை வெல்லவும்; ஊழ்வினை, வினை, ஆள்வினை, சூழ்வினை .... முதலியவைகளை வென்றிடவும்; பழம்பிறப்புக்களையும், மறு பிறப்புக்களையும் இப்பிறப்பிலேயே நிறைவுறுமாறு செய்யவும்; ஆவி, ஆன்மா, ஆருயிர் எனும் மூன்றையும் ஒன்றாக்கிடவும்; பசு, பதி, பாசம் என்ற மூன்றையும் ஒன்றாக உணர்ந்திடவும்; ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், இரங்கல் எனும் ஐந்தினையும்

தன்னிலையாக்கிடவும் ...... உதவுவதற்காகத்தான் காலை, மதியம், [உருமவேளை], மாலை, நள்ளிரவு, இடை இரவு, முன் இரவு என்ற நேரங்களில் மேற்படி ஐந்து வகைக் காயந்திரிகளையும் ஓதிப் பயனடையும் பூசாவிதிகளை வகுத்தார்கள் பதினெண்சித்தர்கள்.

(3) இவை மனிதனுக்கு அனைத்து வகையான சத்திகளைத் தருவதால், **'சத்தி காயந்திரி'** எனப் பெயரிடப் பட்டன. ஆனால், ஆரியர்கள் சத்தி காயந்திரி என்ற சொல்லை வைத்துக் கொண்டு காயந்திரி மந்தரத்திற்காக *'காயத்ரீ'* என்ற பெண் தேவதையை **கற்பனை** செய்து விட்டார்கள். அந்த தேவதைக்கு ஐந்து தலைகள் இருப்பதாகவும், குறிப்பிட்ட ஆயுதம் இருப்பதாகவும், தாமரை மேல் அமர்ந்திருப்பதாகவும் கூறி விட்டார்கள். **இவையனைத்தும் கட்டுக் கதைகளே**. மேலே குறிப்பிட்டது போல் காயந்திரிகள்; மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்து வகைப்பட்டவையே தவிர ஐந்து தலைகள் உடைய பெண் கடவுள் அல்ல.

**குறிப்பு:-** வடஆரியர்கள், அதாவது பிருமணர்கள், தாங்களும் குழம்பி பிறரையும் குழப்பி இந்து மதத்தின் உயிர் நாடியான ஐந்து வகையான காயந்திரி அருள் வாசகங்களையும் மக்கள் இழக்கும்படிச் செய்து விட்டார்கள். இதனால் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்யவே முடியவில்லை. எனவே, உடனடியாக வட ஆரியர்களான பிருமணர்களைத் திருத்த முற்படுவதை விட உண்மையான இந்துக்கள் அனைவருக்கும், பதினெண்சித்தர்கள் வழங்கிய உண்மையான காயந்திரி மந்தரத்தை அறிவித்து பயிற்சி செய்து பயன் துய்த்தவர்கள்; தேவையானால் மற்ற நான்கு காயந்திரிகளையும் குருவழி தெரியலாம், அறியலாம், புரியலாம், உணரலாம், தெளிந்து செயலாக்கலாம் என்று அறிவிப்புச் செய்ய வேண்டும்.

(4) இளமுறியாக் கண்டத்தில் (1984இல்) இன்றைக்கு 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னால் பதினெண்சித்தர்கள் அண்ட பேரண்டமாளும் ஆட்சிமொழியான தமிழ்மொழியில் வழங்கிய **காயந்திரி மந்தரம்**:-

**'ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்.'**

(5) பதினெண்சித்தர்கள் அருட்பசியுடைய மனிதன் தன்னுடைய பசியையும், தாகத்தையும் போக்கிக் கொள்வதற்காகத் துய்த்து மகிழக் கூடிய பெரிய விருந்தாகப் படைத்தவைதான் 'ஐந்து வகையான சத்திக் காயந்திரிகள்'.

(6) "பதினெண்சித்தர்கள் மனிதர்களில் அருட்கொடையாளியாக, ஞான வள்ளல்களாக, பிறரின் அருட்பசி போக்கும் அருளாளனுக, அருளுலக அனைத்து வகை அருள்நிலையினருக்கும் மருத்துவம் பார்க்கும் அருள் மருத்துவனுக, அருளுலகின் உயிராக, **'<u>சீவனுக</u>'** அருட்சீவன்களை யெல்லாம் பாதுகாக்கும் அருமருந்தாக **சீவ காயந்திரி மந்திரம்** அருளினுர்கள். இதுவே, **'<u>சிவ காயந்திரி மந்திரம்</u>'** என்பது. பிறமண்ணினரான அதாவது அன்னியர்களான வடஆரியர்களால் தமிழிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட சமசுகிருத மொழியில் *'<u>சிவ காயத்ரீ மந்த்ரம்</u>'* என்று பெயரிடப்பட்டு மேலே குறிப்பிட்ட <u>மந்திரத்தின் ஆரம்பத்திலுள்ள மூன்று வரிகளை மட்டும்</u> தங்களுடைய சமசுகிருத மொழியில் மொழி பெயர்த்துக் கொண்டார்கள். இதனுல், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்த தவருன *சிவ காயத்ரீ மந்த்ரத்தைச்* சொல்லிக் கணக்கற்ற கோடி மக்கள் வீணுகி விட்டார்கள்.

**<u>குறிப்பு</u>:-** "முறையில்லாமல்; குருவழிப் பயிற்சியில்லாமல்; கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை, அருளாணை, மருளாணை எனும் ஆறு வகையான ஆணைகளில் மூன்று ஆணைகளையாவது பெருமல்; சரியான பலி பொருள்கள், படையல் பொருள்கள் இல்லாமல்; மேற்படி *சிவ காயத்ரீ மந்த்ரத்தைச்* சொல்லி தற்கொலை செய்து மாண்டவர்கள், பேயாக பிசாசாக அலைபவர்கள், குருவின்

சாபத்திற்கும், திருவின் பாவத்திற்கும் உள்ளானவர்கள் ஏராளமானவர்கள்! ஏராளமானவர்கள்! ஏராளமானவர்கள்!

எனவேதான் நிம்மதியில்லாமல் உருவங்களாக, அருவங்களாக, அருவுருவங்களாக அலைபவர்களைக் காப்பதற்காகவும்; இனிமேல் யாரும் மேற்கூறிய இழிந்த, பழிமிக்க, அவலக் கேவலத் துன்ப நிலைகளை அடைந்திடாமல் பாதுகாக்கும் பொருட்டே; பதினெண் சித்தர்கள் உண்மையான இந்துமதத்தில் கூறிய **சீவ காயந்திரி மந்திரம்** இப்போது நமது ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களால் குருபாரம்பரியத்திலிருந்து அருளப் படுகின்றது. தெரிந்தவர் தெரிந்து, அறிய முடிந்தவர் அறிந்து, புரிய முடிந்தவர் புரிந்து, தெளிய முடிந்தவர் தெளிந்து, உணர முடிந்தவர் உணர்ந்து உரிய பெரிய அரிய பயன்களை அடையலாம்! அடையலாம்! அடையலாம்!" என்று இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் பன்னிரண்டு கிளைகளும் அருளார்ந்த அழைப்பு அறிவிப்பை வழங்கிக் கொள்கின்றன. வாரீர்! வாரீர்! வாரீர்!

(7) இந்தச் **'சீவ காயந்திரி மந்திரம்'** சொல்லுபவர்கள் அருளைப் பெறுகின்ற அளவுக்கு மேலாகவே தங்களிடமிருந்து அருளைப் பிறருக்கு வழங்குகிறார்கள். அதாவது, இதனைப் பயிற்சி செய்பவர்கள் மிக விரைவில் உலகியல் தோற்றப் பொலிவு, உணர்வு, எண்ணம், ..... முதலிய அனைத்தையுமே படிப்படியாக உயர்த்தி ஞானத் தருக்களாக, மனித நடமாட்டமில்லாத மலைகளிலும், காடுகளிலும் வாழுகின்ற நிலையைப் பெற்றிடுவார்கள். இவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இம் மந்திரத்தை பயிற்சி செய்தால்தான் சிலைகள், ஓவியங்கள், சக்கரங்கள், கருவறை மூலவர்கள்.... முதலியவர்களை முன் நிறுத்திப் பூசை செய்து அருள் ஊற்றுக்களாக உருவாக்கிடலாம்.

பல சமயங்களில் இவர்களே தாங்கள் வழிபடும் பொருள்களில் அருவுருவமாக ஐக்கியமாகி விடுவார்கள்.

**<u>குறிப்பு:-</u>** குருபாரம்பரியத்திலேயே "ஞானக் கிறுக்கர்களும், மெய்ஞ்ஞான மருத்துவர்களும்தான் **'சீவ காயந்திரி மந்திரம்'** சித்தி செய்வார்" என்ற வாசகம் இருக்கிறது என்றால் **சீவ காயந்திரி மந்திரம்** பற்றி அதிகமாகக் கூறத் தேவையில்லை.

**(8) <u>சீவ காயந்திரி மந்திரம்:-</u>**

**<u>குறிப்பு</u>**:- வழக்காற்றில் குருபாரம்பரியம் உட்பட அனைத்துச் சித்தர்கள் நூல்களிலும் **<u>சி</u>வ காயந்திரி மந்திரம்** என்றுதான் இது குறிக்கப் படுகிறது. குருவாக்கில்தான் **<u>சீ</u>வ காயந்திரி மந்திரம்** என்ற சொல் இருக்கின்றது. வடஆரியர்கள் அதாவது பிறமண்ணினரான பிருமணர்களின் சமசுகிருதத்திலுள்ள தவறான *சிவ காயத்ரீ மந்த்ரத்தை* வன்மையாகக் கண்டித்துத் திருத்த முற்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்தான் முதன்முதலாக <u>குருவாக்கிலிருந்து 'சீவ காயந்திரி மந்திரம்'</u> என்ற சொற்றொடரை எழுத்தில் எழுதி <u>குருவாக்கிய வாசகமாக்கினார்</u>. அதன் பிறகே இது குருபாரம்பரிய வாசகமாயிற்று.

**<u>சிறப்புக் குறிப்பு</u>:-** இந்து மத மறுமலர்ச்சிக்காக பிற்காலச் சோழப் பேரரசு என்கின்ற [கி.பி. 785 முதல் 1279 முடிய] <u>ஓர் அருட்பேரரசை</u> [The Latter Chola Kingdom was founded by His Holiness Siddhar Karuwooraar, the XI Peedam as the Divine Kingdom of the Indhuism namely the Siddharism.] உருவாக்கிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்தான் <u>ஏட்டில் எழுதப்படாமல் செவி வழியாகவே வாழும் 'எழுதாக் கிளவி' இலக்கியங்களாக</u> இருந்த கருவாக்குகள், குருவாக்குகள், தருவாக்குகள், திருவாக்குகள்,

அருள் வாக்குகள், மருள் வாக்குகள் ..... முதலிய பல வகை வாக்குகளையும் வாக்கியங்களாக மாற்றி இலக்கியப் புரட்சி செய்தார்; அருட்புரட்சி செய்தார். இவரேதான் மேற்படி குருவாக்கியங்களைப் பரவலாக குருபாரம்பரியத்தில் எழுதி **குருபாரம்பரிய வாசகம்** என்ற நிலையையும் அவைகளுக்கு வழங்கினர்.

## (9) <u>சீவ காயந்திரி மந்திரம்</u>

**தத்துவப் பிறப்பாய வித்தே மகேசா**
**மகாதேவே நீ தீயே யாகி**
**தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்**
**என்னோடு உன்னோடன்றி எங்கும் அருளூற**
**ஓம் நமச்சிவாய சிவாயநம ஒலியருளினை**
**தழைத்தெழு நீ, நாங்கள் பிழைத்தெழ அருளு நீ**
**அழைக்கிறோம்! செழுந்தீயே செழித்தெழு நீ!**
**வாசி வாசி! வாசி வாசி! வாசி வாசி!**
**வசி வசி! வசி வசி! வசி வசி!**
**ஓம் காயந் திரிந்து சிவமாகட்டும்!**
**ஓம் ஆவி ஆன்மா ஆருயிர் ஒன்றுகட்டும்!**
**தத்துவமே நமச்சிவாய மென்று ணர்ந்தோம்!**
**சித்தாந்தமே சிவாயநம வென்று ணர்ந்தோம்!**
**நங் மங் சிங் வாங் யங்**
**காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!**
**ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!**

***- சிவ காயந்திரி மந்திரம்***

[சத்தி காயந்திரி மந்தரம் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது]

(10) [1]சிவலிங்க உருவை வைத்தோ, [2]ஐங்கோணச் சக்கரம் வைத்தோ, [3]குருவடிவ ஓவியம் வைத்தோ, [4]புகை எழுப்பியோ,

[5]ஒளி விளக்கேற்றியோ சீவனை சிவனை வழிபடுங்கால் கூறி அருட்பயனைத் துய்க்க உதவும் **சீவ காயந்திரி மந்திரம்**. இதனைக் கூறும்போது ஏதாவது படையல் படைக்கப் படல் வேண்டும்.

**- குருபாரம்பரியச் செய்தி.**

(11) **குருவாக்கிய விளக்கம்**:- 'நேரில் குருவழியாகக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று உள்ள குருவாக்குச் செய்திகளில் இந்த **'சீவ காயந்திரி மந்திரம்'** பற்றிய செய்திகள் மட்டும் பல்வேறு காரணங்களை முன்னிட்டு குருவாக்கியங்களாக எழுதப்பட்டு உலகம் முழுதும் அனுப்பப் பட்டிருக்கின்றன. அதாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அருளாட்சி அமைப்பதற்காக பேராற்றல் மிக்க அருளாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டே இதுபோல் குருவாக்கியங்கள் எழுதி நாடெங்கும் அனுப்பினார். அவர் எதிர்பார்த்த பயன் கிடைத்தது. மிகப் பெரிய அருளாளர்கள் உருவானார்கள். அவர்கள் அருளுலகில் மிகப் பெரிய மலர்ச்சியை உருவாக்கினார்கள். அதாவது ஏறத்தாழ எல்லாக் கருவறைகளையும், 18 வகைக் காடுகளையும் உயிர்ப்பித்துக் கொடுத்தார்கள். அதனால் இவர் உருவாக்கிய அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் ஆற்றிய அருட்பணிகள் அனைத்தும் முழுமையான வெற்றியைப் பெற முடிந்தது.

குறிப்பாக அவர் 'பந்திக்குப் பந்தி ஆயிரம் குதிரை வீரர் மண் பொம்மைகளைச் செய்து அரியலூர் கோவிலூரில் நிறுத்தி வைத்து அனைத்தையும் மானுடராக உயிர் பெறச் செய்து மாயப் போர் நிகழ்த்தி முதலாம் விசயாலயனை அரியணையில் அமர்த்தினார்' என்றால்; இதற்குத் தேவையான அருளாற்றல் மேற்படி **சீவ காயந்திரி மந்திரத்**தைச் சித்தி செய்த அருளாளர்கள் ஒருங்கு கூடி செயல்பட்டதுதான். அதாவது, மண் பொம்மையை உடலும் உயிரும் உணர்வும் அறிவும் செயலும் உடையதாக மாற்றிடும் ஆற்றல் **சீவ**

**காயந்திரி மந்திர**ச் சித்தியாளருக்குத்தான் உண்டு! உண்டு! உண்டு! '**<u>இத்தகைய அரிய சித்தியாளர்கள் வாழ்ந்த ஊர்தான் அரியலூர்</u>**'.

(12) இந்த அரிய பெரிய **சீவ காயந்திரி மந்திரம்** குரு வழியாகத்தான் தக்காருக்கு அறிவிக்கப்படும் நிலே அல்லது சட்டம் அல்லது மரபு பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதியால்தான் மீறப்பட்டது. ஏனென்றல் சீனர், யவனர், சோனகர், களப்பிறர், கலப்பிறர், பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர், ..... முதலியோர்களுடன் போராடியே பதினெண் சித்தர்கள் உருவாக்கிய **உண்மையான இந்துமதத்தை** மறுமலர்ச்சியும், வலுவான வடிவமைப்பும், வளமான வாழ்வும் பெறச் செய்ய வேண்டியிருந்தது. அதனுல்தான், அவர் அவசர அவசியமாக இமயமலேயின் முடி முதல் கன்னியாகுமரி அலேகடல் கடந்து சிதறிக் கிடந்த தீவுகள் வரை உலகெங்கும் அருளாளர்களே உருவாக்கி உலகியலுக்கேற்ப அருட்படை திரட்டி அருளாட்சி அமைத்தார்.

இவரைத் தொடர்ந்து **சீவ காயந்திரி மந்திரம்** சித்தி செய்பவர்களுக்குத் தேவையான பாதுகாப்புக்களேயும், பரிந்துரைகளேயும், அருளேயும் ..... வழங்கக் கூடியவர்கள் தோன்ருத காரணத்திஞல்தான் இந்த **சீவ காயந்திரி மந்திர**மும் <u>சிவலிங்க</u> ['இங்கு இலிங்கம் என்ற பொதுப் பொருளேயே இந்த சிவலிங்கம் என்ற சொல் குறிக்கிறது' என்று காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளேயின் குறிப்பு இருக்கிறது. ஏனென்றல் **சீவ காயந்திரி மந்திரம்** பற்றிய இக்கட்டுரை சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் எனப்படும் உ.இராமசாமி பிள்ளேயால் எழுதப்பட்டது] வழிபாடும் காலப் போக்கில் குறைந்து கைவிடப்படும் நிலேக்கு வந்து விட்டன.

இப்போது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டிருப்பதாலேயே பேராற்றல் மிக்க அருளாளர்களே உருவாக்குவதற்காகவே மீண்டும் இந்த **சீவ காயந்திரி மந்திரம்**

அருளுலகில் அறிமுகப் படுத்தப் படுகின்றது. இது அச்சிட்டு வெளியிடப் படுவதால் ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி செய்யலாம். உணவுக் கட்டுப்பாடு, மூலிகைகள் உண்ணுதல், உயிருள்ள ஏழு பருவத்துப் பெண்களிடமும் வாழ்த்துப் பெறல், குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெறல் - என்று பல பேருண்மைகளை அநுபவப் பூர்வமாக அறிந்து கொண்டு இந்த **சீவ காயந்திரி மந்திர**த்தைச் சித்தி செய்தால் நல்லது.

(13) இம் மந்திரப் பயிற்சி முயற்சியாளர்கள் அன்றாடம் கருவேப்பிலை இலை சில சாப்பிட வேண்டும். வாரம் ஒருமுறையாவது கருவேப்பிலை துவையல்# [# குருவழிக் காண்க] சாப்பிட வேண்டும். பலமுறை நீராட வேண்டும். ஐந்து வகை எண்ணெயில் வாரம் ஒரு முறை முழுக்காட வேண்டும். உரு ஏற்றுகின்ற வழிபாட்டுக்குரிய பொருள் எந்த அளவு உரு ஏறியிருக்கிறது என்பதைப் புரிந்து பூசைகளைச் செய்ய வேண்டும். இச் சித்தியைச் செய்பவர்கள் எந்த நேரத்திலும் சமாது நிலையை அடைந்திடுவர் என்பதால் இவர்கள் தங்களுடைய குருவோடும், அருளுலக வாரிசுகளான தொண்டர்களோடும் மிக நெருக்கமான தொடர்பு கொண்டு வாழ வேண்டும். உலகியலுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளே மிகுந்திடும் என்பதனால் இவர்கள் மலைகளிலும், காடுகளிலுமே வாழ நேரிட்டு விடும். இக் குறிப்பை உணர்ந்து மந்திர சித்தி செய்வது நல்லது

- **குருவாணை**.

**//உண்மை நகல்//**

**// மூல நகல்: சித்தரடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் உள்ளது. //**

# சீவ காயந்திரி மந்திரம் பற்றிக் குருபாரம்பரியச் செய்தி

**[சத்தி காயந்திரி மந்தரம் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது]**

சிவலிங்க [1]உருவை வைத்தோ, [2]ஐங்கோணச் சக்கரம் வைத்தோ, [3]குருவடிவ ஓவியம் வைத்தோ, [4]புகை எழுப்பியோ, [5]ஒளிவிளக்கேற்றியோ சீவனை சிவனை வழிபடுங்கால் கூறி அருட்பயனைத் துய்க்க உதவும் **சீவ காயந்திரி மந்திரம்**. இதனைக் கூறும்போது ஏதாவது படையல் படைக்கப் படல் வேண்டும்.

**- குருபாரம்பரியச் செய்தி**

# குருதேவர் அருள் விளக்கம்

இம் மந்திரத்தை 18.6.85 செவ்வாய் இரவு 11 முதல் 1½ வரை விளக்கமாக எழுதும் போது அண்டபேரண்டத்தவர் முதல் எண்ணற்ற அச்சமிகு (பயங்கர) உருவ, அருவ, அருவுருவத்தார்கள் நேரில் தோன்றினர்கள். இரவு 12 மணிக்கு இருந்த தடைகள் ஏராளம்.

வேம்படிதாளம் C.M. செயராமன் செட்டியார் முதல் மகன் விசயராகவன் [B.Sc.(Statistics), student]; வேம்படிதாளம் கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணியின் தம்பி பத்தவச்சலம், பவானி சங்கமேசுவரர் சன்னிதானம்; பெ.சௌந்தரராசன் B.E. [இவன்தான் ஓலைநாயகமாக இருந்து எழுதியவன்] தொட்டியம் மருதக் காளி சன்னிதானம் ஆகியோர் கேட்க இரவு 1 மணிக்கு “ஓ ஓ ஓ” என்று அச்சமும் ஆச்சரியமும் கலந்த தெய்வீக ஒலிகள் [Divine Sounds] எழுந்தன. எமது இல்லம் சென்னை பெரம்பூர் செம்பியம் மருத்துவமனைக்

[E.S.I.Dispensary] குடியிருப்பில் இருந்தும் [Doctor’s Quarters, ESI Dispensary, Sembium, Madras-11] இவ்வளவு பெரிய நிகழ்ச்சிகள் நடந்தன.

அதாவது, யாம் அருளாட்சி அமைப்பதற்காகப் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் போல துணிந்து **<u>சிவ காயந்திரி மந்திரம்</u>** முழுமையாக வெளியிட்டு விட்டோம். இதை யார் வேண்டுமானாலும் பயிற்சி செய்து மிகப் பெரிய சித்திகளைப் பெறலாம். அதாவது, அருளை அநுபவப் பொருளாக அடைபவர்களே, அருளாட்சி அமைக்கும் சிற்பிகளாக, தலைவர்களாக, தளபதிகளாக மாறிடுவார்கள்.

இம் <u>மாபெரும் அருட்புரட்சி</u> கலியுகத்தில்தான் நிகழுகிறது; இரண்டாவது முறையாக நிகழ்த்தப் படுகிறது. யாம், இந்துமதத் தந்தை, குருதேவர், ஞாலகுரு, ஞானச்சாரியார் என்ற நிலையிலிருந்து அருள் உலகில் செய்யும் மிகப் பெரிய புரட்சியே இது. பலரும் அருளுலகைக் கற்பனை யுலகாக, மடமை யுலகாக, மூடநம்பிக்கை உலகாக, பயனற்ற உலகாக நினைப்பது மாறட்டும்.

இந்தச் **சீவ காயந்திரி மந்திரம்** [ஒன்றரை இலட்சம் முறை (1,50,000)] நூற்றைம்பதாயிரம் முறைகள் ஓதப்பட்டு நிறைவு செய்யப்பட்டது முதல்; உயிரும், செயல்நிலையும் பெற்று விடும். இப்படித் தயாராகுபவர்கள் அருளுலக இருளை யெல்லாம் அகற்றுவார்கள்.

16/6/1985 அன்று வில்லிவாக்கம் ஈசுவரர் முன்னிலையில் அண்டபேரண்டத்தவரை அழைத்து சிவ காயந்திரி மந்திரத்தை மட்டும் ஏட்டில் எழுதினேம். உடனே வலக் காலில் பாதிப்பு வந்து விட்டது. எனவே, 17/6/85 (திங்கட் கிழமை) ஒரு நாள் அண்டபேரண்டத்தார் அனைவரையும் வழிபட்டு இன்று 18/6/85 இரவு 11 மணிக்கு மேல் சிவ காயந்திரி மந்திரம் முழுமையாக

எழுதி வெளியிட்டு விட்டோம். இந்த உலகு இதனையும், எம்மையும் பயன்படுத்துவதைப் பொறுத்து அருளுலக இருளும், பொருளுலக இன்னல்களும் அகன்றிடும், அருளாட்சி அமைந்திடும்.

பொதுவாக இந்தச் **சீவ காயந்திரி மந்திர**த்தின் முதல் மூன்று வரிகளை மட்டுமே சிவாச்சாரியார்கள், குருக்கள்கள், பூசாறிகள், குருமார்கள், பட்டாச்சாரியார்கள், ஆச்சாரியார்கள், பண்டாரங்கள், தேசிகர்கள்.... கூறி அன்றாடப் பூசைகளைச் செய்வார்கள். ஆனால், இது கூட 48 வயதுக்குள் இவர்களை உலகியலில் பற்றுப் பாசம் இல்லாதவர்களாகவும், உடல் நலம் பாதிக்கப் பட்டவர்களாகவும் ஆக்கிடும். எனவேதான், சிவன் கோயிலில் பணிபுரிபவர்கள் பெரும்பாலும் நலிவு, மெலிவு, பாதிப்பு, ... முதலியவைகளை அடைகிறார்கள்.

உடனடியாக இனிமேல் இந்தச் **சிவ காயந்திரி மந்திரம்** சொல்லுபவர்கள் குருவழி இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெறல் வேண்டும்; அல்லது மேற்படி **சிவ காயந்திரி மந்திரம்** சொல்லுவதைக் குறைக்க வேண்டும், நிறுத்த வேண்டும். அருளுலகத்தார் பாதிப்புக்களைத் தடுக்க இது ஓர் எச்சரிக்கை அறிவிப்பு வேண்டுகோள்.

சித்தர் நெறியே -> சீவநெறி -> சிவநெறி.

<u>அனைத்து வழிபாட்டு நிலைய நாற்பத்தெட்டு வகை ஊழியக் காரர்களும் **சித்தர்களின் கருவழி வாரிசுகளாகவும், குருவழி வாரிசுகளாகவும்தான் உள்ளனர்**. எனவேதான், இவர்கள் கருவறை மூலவர்களுக்கு ஊழியம் செய்வதில் குற்றம் குறைகளிருந்தாலும் இவர்கள் தாக்குப் பிடிக்கிறார்கள்.</u>

கோயில் ஆலயமாகவும், ஆலயம் கோயிலாகவும் தவறாக வடஆரியர்களால் பூசை செய்ய ஏற்பாடு செய்யப் பட்டும்; சிவாச்சாரியார், அந்தணர், தேசிகர், ஓதுவார், குரு, குருக்கள், குருமார், பண்டாரம், பூசாறி, தீட்சதர், பட்டர், பட்டாச்சாரியார்,

ஆச்சாரியார், ... எனப்படும் நாற்பத்தெட்டு வகையினரும் பதினெண் சித்தர்களின் வாரிசுகளே என்பதால் அருளுலகப் பாதுகாப்புக்களைப் பெற்றே வருகின்றனர். ஆனால், அமுதத் தமிழின் அருளூறு வாசகங்களைக் கைவிட்ட இவர்கள் அருளுலக இருளையும், பொருளுலக இன்னல்களையும் குறிப்பிட்ட அளவு அநுபவிக்க நேரிட்டு விட்டது. எனவே, இந்தச் **சீவ காயந்திரி மந்திரம்** சொல்லுபவர்கள் எச்சரிக்கையாகச் செயல்படல் வேண்டும்.

# இந்துமத உட்பிரிவுகளும் இந்தச் சீவ காயந்திரி மந்திரமும்

கலியுகத்தில் பிறமண்ணினராகிய பிருமணர்கள்தான் சிவன், திருமால், சத்தி, பிறமண், முருகன், விநயகர் ..... என்று ஒவ்வொரு கடவுளின் பெயராலும் ஒரு தனி மதப் பிரிவினை உண்டாக்கினார்கள். அதாவது, சாதிகளைப் பிற்காலத்தில் வலிமைப் படுத்தி, வளப்படுத்தியது போல்; இந்த மதப் பிரிவுகளையும் வளப்படுத்தி வலிமைப் படுத்தினார்கள் பிறமண்ணினரான பிருமணர்கள். இந்தச் **சீவ காயந்திரி மந்திரம்**தான் அனைத்து உயிர்ப்பு, புத்துயிர்ப்புச் செய்யப் பயன்படக் கூடியது. இதுவே விரைந்து மனிதர்களைக் கடவுளாக்கும் வல்லமை பெற்றது. ஆனால் **சாதாரண உலகியல் வாழ்வில் பற்றும் பாசமும் ஆசையும் உடையவர்கள் இதைப் பயன்படுத்தவே கூடாது**.

சமசுகிருத மொழியாலும், பிருமணராலும் இந்து மதத்துக்கும், இந்துக்களுக்கும் ஏற்பட்ட கேடுகள், அழிவுகள், இழப்புக்கள்:- சத்தி காயந்திரி மந்தரத்தைத் தவறாகச் சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்த்து அதன் ஆற்றலையும், பயனையும் வீணாக்கி விட்டார்கள். இதேபோல், பதினெண்சித்தர்கள் சாதாரண மக்களும் பூசை செய்வதற்காகச் **சீவ காயந்திரி மந்திர**த்தில் முதல் மூன்று வரிகளை மட்டும் ஈர உடையுடன் இருந்து பூசை செய்யும் போது

உருவேற்றலாம், (பயன்படுத்தலாம்) என்ற நிலையை ஏற்படுத்தி யிருந்தனர்.

இதிலும், கருவறை மூலவர்களைத் தொட்டுப் பூசை செய்யும் கருவறை ஊழியக் காரர்கள் இந்த மூன்று வரி மந்திரங்களை எப்போதும் உச்சரித்துப் பூசைகளைச் செய்யலாம். எல்லாக் கடவுள்களுக்கும் உருவேற்றும் **சீவ காயந்திரி மந்திரம்** இதுவே என்பதால் <u>எல்லாக் கோயில்களிலும்</u> [**மத வேறுபாடுகள் இல்லாமல்**] வழிபாடு செய்யும் ஊழியக்காரர்களும், உலகியல் கடந்து அருளுலக இன்பங்களைத் துய்க்க விரும்பும் பத்தர்களும் இந்த மூன்று வரிச் **சீவ காயந்திரி மந்திர**த்தை முணுமுணுத்துக் கொண்டே இருக்கலாம் என்று விதிவிலக்கு வழங்கினுர்கள், பதினெண்சித்தர்கள்.

இருந்தாலும், <u>**தக்க குருவின் துணையும், வழிகாட்டலும், அருளும் இல்லாமல்**</u> இந்தச் **சீவ காயந்திரி மந்திர**த்தால் பெய்யும் அருள்மழை நீரைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அதாவது, அதிக மழையால் பயிர்கள் பாதிக்கப்படும் என்பது போல்; **சீவ காயந்திரி மந்திரம்** அளவோடும், முறையோடும் பயிற்சி செய்யப் படா விட்டாலும்; தக்க குருவின் துணையும், பாதுகாப்பும், வழிகாட்டலும் இல்லாவிட்டாலும்; நலிவு மெலிவுகளை நல்கிடும்.

**சீவ காயந்திரி மந்திர**ச் சித்தியாளர்கள் காட்டாற்று வெள்ளம் போன்றவர்களாவார்கள். எனவே, இவர்களிடம் அருள் பெறுபவர்கள் மிகுந்த அடக்க ஒடுக்கப் பணிவுடனும், பொறுமையுடனும், பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். கோழி மிதித்துக் குஞ்சு பாதிக்கப் படாதது போல்; பெரிய பாதிப்புக்கள் இந்தச் **சீவ காயந்திரி மந்திர**ச் சித்தியாளர்களால் ஏற்பட்டு விடாது.

அதாவது, இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவும், ஆர்வமும், அருள் நாட்டமும் பத்தர்களுக்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்தச் சித்தியாளர்கள் காடுகளிலும், குகைகளிலும் காலத்தை வென்று நீள் தவத்திலேயே ஆழ்ந்திடுவார்கள். இவர்கள்

மக்களுக்கு உதவவில்லை என்று குறை கூறக் கூடாது. மக்கள்தான் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பசுமாட்டில் பால் கறப்பது போல் இந்தச் **சீவ காயந்திரி மந்திரச்** சித்தியாளர்களைப் பேணிப் போற்றிப் பாதுகாத்தே அருளைப் பெற்று உய்ய வேண்டும்.

தவறான சமசுகிருத *'சிவ காயத்ரீ மந்த்ரம்'*

***தத் புருஷாய வித்மஹே***
***மஹா தேவாய தீ மஹி***
***தன்னோ ருத்ர ஃப்ரச்சோதயாத்***
***ஓம் நமசிவாய.***

**இந்தச் சமசுகிருத *சிவ காயத்ரீ மந்த்ரத்*தால் பயன் ஏதும் விளையாது** என்று மிகத் தெளிவாக குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் ..... முதலியவை கூறுகின்றன. எனவே, இனிமேலாவது அருளுலகத்தார் மத வேறுபாடின்றி, சைவ வைணவச் சண்டையின்றி இந்தச் *சிவ காயத்ரீ*யைப் பயன்படுத்தி வீணாகிடாமல் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள உண்மையான **சீவ காயந்திரி மந்திர**த்தைச் சொல்லிப் பயனடைய முற்படுங்கள். இந்த அருட்கொடையை இந்துமதத் தந்தை, அரசயோகி, ஞானாச்சாரியார், குருதேவர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், ஞானத் தந்தை வழங்குகிறார்.

பத்தர்கள் தெரிந்தும் தெரிய வைத்தும், அறிந்தும் அறிய வைத்தும், புரிந்தும் புரிய வைத்தும், தெளிந்தும் தெளிய வைத்தும், உணர்ந்தும் உணர வைத்தும், ..... செயல்படுத்துமாறு அருளுலக அறிவிப்பு அழைப்பு விடுக்கப் படுகிறது. அருளுலக இருளகற்றும் அருளாளர்கள் உருவாகட்டும். அருளாட்சி அமைக்கும் அருட்படைத் தளபதிகள் தயாராகட்டும். பொருளுலக பொல்லாங்குகளைப் போக்கும் அருட்செல்வர்கள் தோன்றி வளரட்டும். அருளை அநுபவப் பொருளாக

வழங்கும் வல்லமையும், வள்ளல் தன்மையும் உடைய சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் வலிவும், பொலிவும், வளமும் பெறட்டும். அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அருளாட்சிக்குரிய கருவாகச் **சீவ காயந்திரி மந்திரமும்** செயல்நிலை பெறட்டும். எல்லோரும் எப்போதும் உருவேற்றிக் கொள்ளப் பயன்படக் கூடிய **சீவ காயந்திரி மந்திரம்** கூறும் முறை:-

**"ஓம் நமச்சிவாய சிவாயநம போற்றி**
**ஓம் பராசத்தி சித்தி முத்தி உத்தி போற்றி**
**தத்துவப் பிறப்பாய வித்தே மகேசா**
**மகாதேவே நீ தீயே யாகி**
**தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்**
**தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!**
**அடியேன் பிழைக்க அருளுவீர்! அருளுவீர்! அருளுவீர்!**
**ஓம் அகர உகர மகரமே சுவையாகுக!"**

- இதனைக் கூறி வருபவர்கள் மெய்ஞ்ஞான உணர்வு, கனு சித்தி, சாயாநிலைச் சித்தி, ஓயாநிலைச் சித்தி, மாயாநிலைச் சித்தி, எண்வகைச் சித்தி, காய சித்தி ..... எனும் தெய்வீக அநுபவங்களைப் பெறுவார்கள். இந்த அருள் ஊற்று ஆற்றுப் பெருக்காய் ஓடி அருட்பயிர் விளைவித்திடும். ஆனால் இந்த ஆற்றுக்குக் கரையாக அமைவது குருவருளே! எனவே, இந்தச் சித்தியாளர்கள் தக்க குருவைத் துணையாகவும், வழியாகவும், வழிகாட்டியாகவும், வழிப்பயனாகவும் பெற்றிடல் வேண்டும்.

**சித்தர் நெறி எனும் இந்து மதம்,**

"குருவே அனைத்துக்கும் கரு"
"குருவும் திருவும் ஒன்றே"
"குருவழிக் காணலே அருளுலகத் தெளிவு நல்கும்"
"குருவின் துணையே இணையில்லாப் பயன் நல்கும்"

"குருவும் தானும் ஒன்ருகும் நிலையே திருநிலை"

"குருவானவனே தருவாய்த் திருவானவன் ஆவான்"

..... ..... என்ற கருத்துக்களையே உயிர் நாடியாகக் கொண்டது. குருவை உணர முடியாதவன் கண்ணிருந்தும் குருடனுய், கை காலிருந்தும் முடவனுய் வாழ்பவனுவான்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

19/6/85

# ஞாலகுரு

**//உண்மை நகல்//**

**<u>நகல் எழுதியவர்:</u>**

அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தரடியான் ம.செ. விசயராகவன், B.Sc., DTVT, [S/O C.M. செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோவில் அருகில், வேம்படிதாளம் அஞ்சல், சேலம் மாவட்டம் - 637504]

"... 'சிவனை குருதிப்பலி இல்லாமல் கும்பிடவே கூடாது, முடியாது; கும்பிட்டால் பாவம்' என்றே குருபாரம்பரியத்தில் இருக்கிறது ....."

**- குருதேவர் அருளுரையில் இருந்து எடுக்கப் பட்டது.**

# சத்திகள் எத்தனை வகை?

"... 'கணக்குத் தெரியாதவர்கள் வீட்டில் நித்தம் நித்தம் சண்டை நடக்கும்' என்பது போல் அருளுலகப் பேருண்மைகளின் அரிச்சுவடியும், வாய்ப்பாடும் தெரியாத, புரியாத காலக்கட்டங்களில் மதம், சாதி, கடவுள், இறை, தெய்வம், ஆண்டவர், தேவர், தேவதை, தேவி, ... என்பனவற்றின் பெயரால் சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், மோசடிகள், தவறுகள், குற்றங்கள், சண்டை சச்சரவுகள், போர்கள், கலவரங்கள், கவலைகள், கலக்கங்கள், ... மிகுந்திடும்.

இவை பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி 1. கருவாக்கு, 2. கருவாசகம், 3. குருவாக்கு, 4. குருவாசகம், 5. தருவாக்கு, 6. தருவாசகம், 7. திருவாக்கு, 8. திருவாசகம், 9. அருள்வாக்கு, 10. அருள்வாசகம், 11. மருள்வாக்கு, 12. மருள்வாசகம், 13. பூசாவிதி, 14. கருவறைப்படி, 15. குருமார் ஒழுக்கம் (ஒழுகலாறு - பாட வேறுபாடு), 16. குடமுழுக்கு நூல், 17. எழுந்தருளி உயிர்ப்பு சாத்திறம், 18. குருபாரம்பரியம், ..... முதலியவைகளை வெளியிடும் போதுதான் அடங்கி நலம் விளையும்.

அதுவரை, 'ஐந்து பிறவிக் குருடர்கள் படுத்துக் கிடக்கும் யானையைத் தடவிப் பார்த்து அதன் வடிவை விளக்கி உரைத்த கதையாகவே அருளுலக உண்மைகள் இருக்கும்' ..."

என்ற பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வாசகத்தை இங்கு எடுத்துக் கூறிச் சத்தி வழிபாடு வளர்ச்சி பெறும் இற்றை நாளில்; சத்தியின் நிலை பற்றிய ஒரு சில பேருண்மைகளை மட்டும் வெளியிட்டுச் 'சத்தி வழிபாடு மலர்ச்சி பெறும் பணி'யைத் துவக்குகிறோம்.

அண்டபேரண்டங்களில் பதினெண்சித்தர்களால் கணக்கற்ற கோடி ஆண்டுகளாகத் தோற்ற, மாற்ற, ஏற்ற வளர்ச்சிகளைப் பெற்று

வந்திட்ட இந்துமதத்தில் 1008 சிவ நிலையினர்கள், 243 சத்தி நிலையினர்கள், 108 திருப்பதி நிலையினர், 96 தத்துவ நிலையினர், 64 சித்துவிளையாடல் நிலையினர், 48 வழிபடு நிலையினர், 48 வழிபாட்டு நிலையக் கருவறையினர் (கருவறை நிலையினர் - பாட வேறுபாடு), 48 அருட்பட்டத்தினர், 48 அருளாளிகள், 48 மருளாளிகள், 48 தேவர்கள், 48 தேவகுமாரர்கள், 48 தேவதூதர்கள், 48 ஆச்சாரியார்கள், 48 ஆழ்வார்கள், 48 அமணர்கள், 48 புத்தர்கள், 48 பத்தர்கள், 48 போத்தர்கள், 48 முத்தர்கள், 48 சீவன்முத்தர்கள், 48 சித்தியார்கள், 48 முத்தியார்கள், 48 சத்தியார்கள், ... என்று அருள் ஊற்றுக்களாகச் செயல்படுபவர் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப் படுகின்றனர்.

1. அனாதி சத்திகள், 2. ஆதி சத்திகள், 3. பாதி சத்திகள், 4. மீதி சத்திகள், 5. அனாதி பராசத்திகள், 6. ஆதி பராசத்திகள், 7. பாதி பராசத்திகள், 8. மீதி பராசத்திகள், 9. அனாதி ஈசுவர சத்திகள், 10. ஆதி ஈசுவர சத்திகள், 11. பாதி ஈசுவர சத்திகள், 12. மீதி ஈசுவர சத்திகள், 13. அனாதி மகேசுவர சத்திகள், 14. ஆதி மகேசுவர சத்திகள், 15. பாதி மகேசுவர சத்திகள், 16. மீதி மகேசுவர சத்திகள் - என்று சத்திகள் பதினாறு வகைப் படுவார்கள்.

சத்தி பீடங்கள் இருநூற்று நாற்பத்து மூன்று வகையான அமைப்புக்களை உடையது. இதற்கென 1. மந்தரங்கள், 2. மாந்தரங்கள், 3. மாந்தரீகங்கள், 4. மந்திரங்கள், 5. மந்திறங்கள், 6. தந்தரங்கள், 7. தாந்தரங்கள், 8. தாந்தரீகங்கள், 9. தந்திரங்கள், 10. தந்திறங்கள், 11. எந்தரங்கள், 12. ஏந்தரங்கள், 13. ஏந்தரீகங்கள், 14. எந்திரங்கள், 15. எந்திறங்கள், 16. ஆகமங்கள், 17. மீமாம்சைகள், 18. ஆரணங்கள் - என்று பதினெட்டு வழிபாட்டு முறைகள் உள்ளன.

சத்தியை வழிபடுபவர் பிடரி மூடிடத் தலைமுடியும், காதளவு பக்க முடியும், மீசையும் வளர்க்க வேண்டும். குருதிப் பலிகள் கொடுத்தும் இசைக் கருவிகள் முழக்கியுமே பூசை செய்ய வேண்டும்.

**இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம்,**
**ஞானகுரு சித்தர் கருவூரார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருதேவர்.**

**குறிப்பு:-**

(a) துறவிகளும், காவி உடை அணிந்தவர்களும், மொட்டை அடித்தவர்களும், புலால் உணவு உண்ணும் பழக்கத்தை வெறுப்பவர்களும், எதிர்ப்பவர்களும், மறுப்பவர்களும் சத்தியை வழிபடவோ, வழிபாடு செய்யவோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்று பதினெண்சித்தர்கள் தங்களின் நூல்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள். அதாவது, **குருதிப்பலி இல்லாமல் சத்தி வழிபாடு செய்யக் கூடாது** என்பது பதினெண்சித்தர்களின் தெளிவான கொள்கையாகும். இதுவே இந்துமதத்தின் முடிவான கொள்கையுமாகும்.

**சிறப்புக் குறிப்பு:-**

(b) குறிப்பிட்ட சத்திக்குரிய சன்னிதானப் பட்டம் வழங்கப் பட்டவர்களுக்கு நான்கு வகையான பீட பட்டங்களில் ஏதாவது ஒரு பீட பட்டமும் (1. ஏமகோடி பீடம், 2. காமகோடி பீடம், 3. சோமகோடி பீடம், 4. வாமகோடி பீடம்) வழங்கப் படுவது பதினெண்சித்தர்களின் குருபீட மரபு.

(c) குறிப்பிட்ட சன்னிதானம் பெற்றவர்களுக்கு நான்கு வகையான ஆச்சாரியார் பட்டங்களில் (1. இறைமையாச்சாரியார், 2. கடவுளாச்சாரியார், 3. தெய்வீகாச்சாரியார், 4. தேவ ஆச்சாரியார்) ஒரு ஆச்சாரியார் பட்டம் வழங்குவது பதினெண்சித்தர்களின் குருபீட மரபு.

(d) குறிப்பிட்ட சன்னிதானப் பட்டம் பெற்றவர்களுக்கு நான்கு வகையான வாள்கள் பட்டங்களில் ஏதாவது ஒரு வாள் பட்டம் வழங்குவது (1. அரியவாள், 2. கூரியவாள், 3. சீரியவாள், [நேரியவாள் என்ற பாட வேறுபாடு ஏடுகளில் காணப்படுகிறது], 4. பெரியவாள்) பதினெண்சித்தர்களின் குருபீட மரபு.

**விளக்கம்:-**

இந்துமதம் தமிழ்மொழியில்தான் பிறந்தது என்பதற்கு மேற்படி அருளுலகப் பட்டச் சொற்களான 1. சன்னிதானம், 2. ஆதீனம், 3. தம்பிரான், 4. பண்டாரம், 5. பண்டார சந்நதி, 6. பீடம், 7. வாள், 8. ஆச்சாரியார், 9. ஆழ்வார், 10. நாயனுர், 11. அடிகளார், 12. அமளிகை, 13. இருக்கை, 14. திருவடி, 15. அருளாளி, 16. மருளாளி, 17. அருளாடு நாயகம், 18. மருளாடு நாயகம், 19. தேவகுமாரர், 20. தேவதூதர், 21. அமணர், 22. பத்தர், 23. பத்தியார், 24. போத்தர், 25. போத்தியார், 26. புத்தர், 27. புத்தியார், 28. முத்தர், 29. முத்தியார், 30. சீவன்முத்தர், 31. சீவன்முத்தியார், 32. அருவச் சித்தியார், 33. உருவசித்தியார், 34. அருவுருவச் சித்தியார், 35. சிவபீடம், 36. சத்தி பீடம், 37. சிவசத்தி பீடம், 38. சித்தியார் பீடம், ... முதலிய நாற்பத்தெட்டு வகையான சொற்களின் அழகும் ஆழமும் மிக்க பொருள்களே சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் இருக்கின்றன.

இவற்ருல், பதினெண்சித்தர்கள்தான் இம்மண்ணுலகில் தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியில் இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கினுர்கள், இவற்றிற்கு உரிய இலக்கணங்களும், இலக்கியங்களும் பல்லாயிரக் கணக்கான பெயர்களில் எழுதப்பட்டும் எழுதப்படாமலும் இருக்கின்றன. [எழுதாக் கிளவிகள், மறைகள் என்பன எண்ணற்ற கோடி. - முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், தத்துவங்கள், ஓதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், நிடதங்கள், துணை நிடதங்கள், இணை நிடதங்கள், ஆரணங்கள்,

சாத்திறங்கள், சூத்திறங்கள், தோத்திறங்கள், நேத்திறங்கள், அத்திறங்கள், ... என்று 1359 வகையான இலக்கியங்கள், இலக்கணங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.]

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்:-</u>**

அருள்மிகு வேம்படிதாளம் காமகோடி பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, 2/24 புதிய வீதி, வேம்படிதாளம் - 637504, சேலம் மாவட்டம். 22 May 1984

// **<u>இதன் மூலநகல்:</u>** சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இதன் மற்றொரு நகல் குருதேவர் அவர்களின் கையெழுத்திலேயே கிடைத்தது. இந்த நகல் கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புகளில் இருந்து கிடைத்தது. //

"...காயத்ரீ என்றால் சமசுகிருத மொழியில் பொருள் கிடையாது, தமிழில் காயந்திரி என்றால் காயம் திரிதல், உடம்பை பக்குவப் படுத்துதல். தமிழ்ச் சொல்லை எவன் திருடினாலும் தெரிந்து விடும், தமிழன் தன்னுடைய தமிழ்ச் சொற்களை இழந்ததினால்தான் தமிழனுடைய மதம் ஒழிந்தது, ஆன்மீகம் ஒழிந்தது, அருள் ஒழிந்தது...."

**- குருதேவர் அருளுரையிலிருந்து எடுக்கப் பட்டது.**

ஓம்

சென்னை-11
8.10.85, 10.40am

# நமது தாயகம்

சாதிகளால், மதங்களால், மடாதிபதிகளால், இலக்கியக் கலைஞர்களால், கலையுலகச் சுவைஞர்களின் நாயகர்களால், அரசியல் கட்சிகளால், சமுதாயச் சீர்திருத்தத் தலைவர்களால், தொழிற்சாலைகளால், வட்ட வட்டார நல மன்றங்களால், ... நமது தாயக மக்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளனர். இப் பிரிவுகள் ஒன்றோடொன்று போட்டியும், பொறாமையும், பகைமையும், மாறுபாடும், வேறுபாடும், முரண்பாடும் வளர்த்துக் கொண்டே வருகின்றன. இதேபோல்தான் தலைவர்களாக இருப்பவர்களுக்கிடையில் என்றுமே ஒற்றுமையுணர்வோ, ஒருமைப்பாட்டுணர்வோ, நட்புணர்வோ, தோழமையுணர்வோ, கூட்டுணர்வோ, ... உருவாக முடியாத அளவுக்குத்தான் ஒருவருக்கொருவர் தேவையில்லாத, பயனில்லாத, உண்மையில்லாத பகைமைகளை வளர்த்துக் கொண்டுள்ளார்கள்.

இவர்களின் நோக்கமெல்லாம் மற்ற தலைவர்களை மட்டம் தட்டியோ, இருட்டடிப்புச் செய்தோ, இல்லாமல் செய்தோ, ... தாங்கள் மட்டும் பெரிய தனித் தலைவராக வளர வேண்டுமென்பதுதான். இதற்காகவே, இவர்கள் தேவையே இல்லாத போராட்டங்களையும்; காரண காரியமற்ற பகையுணர்வுகளையும், உண்மையற்ற வெறுப்புணர்வுகளையும் மற்றவர்கள் மேல் வளர்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். எனவே, தாயகத்து மக்கள் பாகப் பிரிவினையால் பல பங்குகளாக்கப் பட்ட ஒரு மந்தையின் ஆடுகள் போலத் தனித்தனிச் சிறு குழுக்களாக அல்லது கூட்டங்களாகப் பிரிந்து நின்று சரியாக வாழாமல் (மேயாமல்) கலங்கியுள்ளனர்.

இவர்களை யெல்லாம் ஒன்றுபடுத்தும் முயற்சி வென்றிட முடியாத கவலைக்குரிய சிக்கலான நிலையில்தான் இருந்து வருகின்றது. இதுவே நமது தாயக நிலை. இந்நிலையில் மாற்றம் செய்திட ஏற்றமிகு தத்துவம் எது? தலைவர் யார்? நம் தாயகத்தில் பழமையை ஆராய்ந்தறிந்தும், இன்றைய நிலைமைகளை துய்த்துணர்ந்து தேவையான செயல்திட்டங்களை வகுத்திடக் கூடிய தத்துவ நாயகனே தலைவனாக இருந்திட முடியும். அப்படிப்பட்ட தத்துவ நாயகன் முறையானதாகவும், நிறையானதாகவும் உள்ள மொழியறிவு, இலக்கிய அறிவு, வரலாற்றறிவு, பண்பாட்டறிவு, பாரம்பரியப் பயிற்சியுணர்வு, பொதுமை நல நாட்டுணர்வு, சமத்துவ உணர்வு, சகோதரத் தத்துவ உணர்வு, ... முதலியவைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அப்படியில்லாமல் எப்படியெப்படியோ முயன்று காலப்போக்கில் சந்தர்ப்ப சூழல்களுக்குரிய சூழ்ச்சிகளைச் செய்து தலைவர்களாகி விட்டவர்களே மிகுதியாக உள்ளார்கள். இம்மாபெரும் குறைபாட்டுத் தலைவர்களால்தான் நமது தாயகம் எண்ணற்ற வலுவான, வலிமையான, காரணகாரியங்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளும், எதிர்பாராத கொதிப்புமிக்க பதட்டமிகு வாய்ப்பு வசதிகளும் ... நிறைய இருந்தும் கூட ஒரு பெரிய இயக்கம் உருவாக முடியவில்லை. பெரும்பாலான மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமையுடன் கிளர்ச்சிமிகு வளவளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தும் அரிய பெரிய தலைவர்கள் தோற்றமும், ஏற்றமும், ஆற்றல்தரு மேன்மையும் பெற முடியவில்லை.

இவற்றால்தான், நமது தாயகத்துக்கு அன்னியர்களே தலைவர்களாக, முதலாளிகளாக, வழிகாட்டிகளாக, பொழுதுபோக்கு கலைஞர்களாக, வணிகர்களாக, குருமார்களாக, ஆச்சாரியார்களாக, குருக்களாக, பூசாறிகளாக, ஆட்சியலுவலக அதிகாரிகளாக ... இருந்து வருகிறார்கள். நம் தாயக மக்களும் உண்மையான தன்மான உணர்வும், உயிரோட்டமான தன்னம்பிக்கை யுணர்வும், இறவாமை பெற்ற இனப்பற்றுமிகு ஒற்றுமையுணர்வும், மறவாமையுற்ற மொழிப்பற்றுமிகு

பெருமித உணர்வும், கட்டுக்கோப்புமிகு நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட பண்பாட்டுணர்வும் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர முடியாத அளவு கூலியுணர்வும், அடங்கி யொடுங்கி வாழும் அடிமையுணர்வும், ஏழையுணர்வும், கோழையுணர்வும் ... பல வடிவங்களில் தங்களால் தங்களுக்குள் அப்பாவியான வாழ்க்கை வாழுகிறார்கள்.

இந்துமதத்தின்

மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள்;
நேம, நியம, நிடதங்கள்;
சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகள்;
அத்திற, சாத்திற, சூத்திற, தோத்திற, நேத்திறங்கள்;
மந்திற, மந்திர, மந்தர, மாந்தர, மாந்தரீகங்கள்;
தந்திற, தந்திர, தந்தர, தாந்தர, தாந்தரீகங்கள்;
எந்திற, எந்திர, எந்தர, ஏந்தர ஏந்தரீகங்கள்;
ஓத, சித்த, போத, நாதங்கள்;
ஈக, ஊக, ஏக, தாக, போக, மோக, வேகங்கள்;
ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்விகள்; ...
புராண இதிகாசங்கள், அருட்பாக்கள், தத்துவப் பாக்கள், சித்தாந்தப் பாக்கள், பாசுரங்கள், மாலைகள்;
எள்ளல்கள், ஏசல்கள், அழுகைகள், அரற்றல்கள், புலம்பல்கள், தொழுகைகள்;
பூசைகள், வேண்டல்கள், கும்பிடுகள், பாடுகிடத்தல்கள், தவமொழிகள்;
பூசாவிதிகள், கருவறைப்படிகள், குருமார் ஒழுக்கம், குருபாணி;
கருவாக்குகள், கருவாக்கியங்கள், கருவாசகங்கள்;
குருவாக்குகள், குருவாக்கியங்கள், குருபாரம்பரியங்கள், குருவாசகங்கள்;
தருவாக்குகள், தருவாக்கியங்கள், தருவாசகங்கள்;
திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள்;

அருள்வாக்குகள், அருள்வாக்கியங்கள், அருள்வாசகங்கள்;
மருள்வாக்குகள், மருள்வாக்கியங்கள், மருள்வாசகங்கள்;
இலக்கிய பாரம்பரியங்கள், அரச பாரம்பரியங்கள்;
சித்தர் பாடல்கள், ஞானப்பாடல்கள்;
கதைகள், காதைகள், கவிதைகள், (காவியங்கள் = காப்பியங்கள்), கீதைகள்;
ஓச்சுக்கள், வீச்சுக்கள், நூல்கள்;
அத்தரங்கள், அத்திரங்கள், அத்திறங்கள்;
சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள்;
சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள்;
தோத்திறங்கள், தோத்திரங்கள், தோத்தரங்கள், நேத்திறங்கள்;

... எனத் தமிழில் பெயரைக் கூடப் பலரும் தெரிந்து கொள்ள இயலாத அளவு மறைக்கப்பட்டு, மறக்கடிக்கப்பட்ட அருளுலக இலக்கியங்களே **மெய்யான இந்துமதத்தை** விளக்குவன.

இவற்றை வளர்க்க வேண்டுமென்றால் அன்றாடம் காலை மாலை 2½ மணி நேரம் ஒரு சாமம் இத்தாயகத்துச் சிறார்களும், இளைஞர்களும் பாடம் கேட்டு, ஓதி உணர வேண்டும். அதற்குரிய தமிழ்வேத, சித்த வேத, இந்துவேதப் பாடசாலைகள் துவக்கப் பட்டேயாக வேண்டும். ஆனால் பதினெண்சித்தர்கள், சித்தர்கள், தமிழ்மொழி, இந்து என்ற சொல்லின் பொருள், இந்துமத உண்மை வரலாறு, இந்துமதமும் உலக மதங்களும் பற்றிய பேருண்மைகள், ... முதலியவைகளைத் தெரியாத இந்துமதத் துறவிகள், சாமியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், மதத் தலைவர்கள், மதத் தொண்டர்கள், மதச் சொற்பொழிவாளர்கள், அருளாளர்கள், ... முதலியோரே கடந்த சில நூற்றாண்டுகளாக இத்திரு நாட்டில் உலா வருகிறார்கள், மதப்பணி ஆற்றுகிறார்கள்.

எனவே, மதத் தலைவர்களாக இளைய தலைமுறையினரைத் தயாரிக்க வேண்டும். நமது மதத் தொடர்பான அனைத்து வகைச் செய்திகளையும், இலக்கியங்களையும், பிறவற்றையும் காலக்கணக்கீட்டு அடிப்படையில் (With a Chronological Approach, attitude and backing ...) தெளிவாகவும், விளக்கமாகவும் கற்பிக்க வேண்டும். ... இதற்குரிய நூல்கள் மீண்டும் மீண்டும் எல்லா நடையில், புதிய புதிய வடிவில் நூல்களை எழுத வேண்டும். பல்வேறு பாடல், ஆடல், கூத்து, நாட்டியம், நாடகம், கதை, காதை, கவிதை, கீதை, ... முதலிய வடிவங்களில் அனைத்தையும் வெளியிட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

இவற்றிற்காகப் பயிற்சிப் பள்ளிகள், குருகுலங்கள், கல்விச் சாலைகள் உருவாக்க வேண்டும். சாதாரண உலகியல் வாழ்வை ஏற்கப் போகும் சிறுவர், சிறுமியர் கூட மதக்கல்வியை (Religious Education) கற்க வேண்டும். அதுதான் நேர்மை, நீதி, வீரம், ஒற்றுமை, பற்று, பாசம், கட்டுக்கோப்பு, அன்பு, ஈவு, இரக்கம், தோழமை, நட்பு, கடமையுணர்வு, பொறுப்புணர்வு, பொறுமை, ... முதலிய பண்புகள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்தோங்கிட உதவிடும். இந்து மறுமலர்ச்சித் திட்டங்கள் செயலும், வடிவும், வாழ்வும், உய்வும், உயர்வும் பெற்றிடும், பெற்றிடும், பெற்றிடும்.

இந்துமதக் கல்வியின் பெயரால் பிறமண்ணினரான பிருமணரின் வடஆரிய வேத மதமான '*ஹிந்து மதம்*' மறுவாழ்வு பெற்றிடக் கூடாது. எச்சரிக்கை. **இந்து மதம்**தான் மறுமலர்ச்சி பெற வேண்டும். அதற்குரிய வண்ணம் தமிழ்மொழியிலுள்ள **இந்து மதம்** தொடர்பான அனைத்து வகை இலக்கியங்களையும் அச்சிட வேண்டும். அச்சிட்டவைகளையும், அச்சிடக் கூடாதவைகளையும் கற்றுத் தரக்கூடிய இளைஞர்களையும், அனைத்து வகையான கல்வி நிலையங்களையும் உருவாக்க வேண்டும்.

முகம்மதியர்கள் தங்களின் சிறுர்களேயும், இளேஞர்களேயும் மதக் கல்வி கற்குமாறு செய்வதில் பேரார்வம் காட்டுவது போலவே **இந்துக்களும் தங்களின் குழந்தைகளே மதக் கல்வி கற்குமாறு செய்ய வேண்டும்**. அப்பொழுதுதான் தன்னம்பிக்கை, இனமானம், தன்மானம், இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று முதலியவை ஊற்றெடுக்கும் வீரமுள்ள, ஈரமுள்ள, தீரமுள்ள, உரமுள்ள, தரமுள்ள வருங்காலச் சந்ததி உருவாகிடும்! உருவாகிடும்! உருவாகிடும்!

எனவே, வருங்காலத்தையாவது இருண்டதாக ஆக்கிடாமல் இருக்க ஆபாசக் கலேகளிலிருந்தும், மோசடியான அரசியல் நிலேகளிலிருந்தும், ஏமாற்றுக்காரச் சமுதாய வலேகளிலிருந்தும் இன்றைய இளந்தலேமுறையைக் காத்திடப் **பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் படைத்த இந்துமதத்தை** மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கும் பணி துவங்கட்டும்! துவங்கட்டும்! துவங்கட்டும்!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**

**நகல் நல்குபவர்:- சித்தரடியான் சீ.மணி,** 28/10/85

**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

"…..நீங்கள் எல்லோரும் தமிழர்கள். சாதி கிடையாது; ஏற்றத் தாழ்வு கிடையாது; தீண்டாமை கிடையாது என்று சொல்லுகிறேமே இதற்குப் பெயர் **இந்து மதம்**. இந்த **இந்து மதம்** தோன்றி 43,73,115 ஆண்டுகள் ஆகின்றது, இங்கே இந்த நாட்டுக்கு வந்த அந்நியர்கள் ஏமாற்றி, அந்த ஒரே ஒரு எழுத்தை மட்டும் மாற்றி, ***ஹி****ந்து மதம்* என்ருக்கி விட்டார்கள், அந்த மதத்திற்கு சொந்தக்காரரர்கள் பிற மண்ணினரான இங்கே வந்த பிருமணர்கள்….."

**- குருதேவர் அருளுரையில் இருந்து எடுக்கப் பட்டது.**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

## ஆண்டவர்க்கு ஆருயிராய் இருப்போரே சித்தர்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com